# வேதத்தில் உள்ள 5 தீத்து (TITUS)

1. யூதர்களுக்கு லீசியா அளித்த சலுகை களுக்கு இணக்கம் அளிக்கும் கடிதத்துடன் கி.மு. 165-இல் யூதேயாவுக்கு அனுப்பப் பட்ட இரு உரோமைத் தூதுவர்களில் ஒருவர் தீத்து மானியு என்பராவார் (2 மக் 11:34).

2. தித்திய யூஸ்துவின் மற்றொரு பெயர் தீத்து யூஸ்து ஆகும். இவர் கொரிந்தியக் குடிமகனாவார். இவரது வீடு செபக்கூடத்திற்கு அருகில் இருந்தது (அ.ப. 18:7). செபக்கூடத்தில் பவுலுக்கும் மற்றக் கொரிந் தியக் கிறிஸ்துவர்களுக்கும் எதிர்ப்பு ஏற்பட்டபோது, இவர் அவர்கைளத் தன் வீட்டில் வரவேற்றார்.

3. பவுலின் தோழனான தீத்து: இவர் பவுலின் சீடரும் உடன் உழைப்பாளியும் ஆவார். இவரைப்பற்றி அப்போஸ்தலர் பணிநூல் ஒன்றும் குறிப்பிடவில்லை. இதற்குக் காரணம் இவர் லூக்காவின் உறவினர் என்று விளக்கம் காட்டுவர் (காண்க: 2 கொரி 8:18-19, 22-23). ஆனால் கலாத்தியர், 2-ஆம் கொரிந்தியர், 2 திமொத்தேயு, தீத்து ஆகியோருக்குப் பவுல் எழுதிய திருமுகங்களிலிருந்து தீத்துவைப்பற்றி அதிகம் அறிகிறோம்.

தீத்து ஒரு கிரேக்கர்; அதாவது, புறவினத் தைச் சேர்ந்தவர். பவுலும் பர்னபாவும் எருசலேம் சங்கத்திற்குச் சென்றபோது (கி.பி. 49) தீத்துவும் அவர்களுடன் உடன் சென்றார் (கலா 2:1.3). இச்சங்கத்தில் தர்க்கிக்கப்பட்ட ஓர் அடிப்படைப்பொருள் புறவினக் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் பெற வேண்டுமா என்பதாகும். பவுலின் கருத்துப்படி, தீத்து விருத்தசேதனம் பெறும் படி கட்டாயப்படுத்தப்படவில்லை என்பது எருசலேம் சங்கத் தீர்மானங்களில் முக்கிய மானதொன்றாகும் (2:3). கொரிந்தியத் திருச் சபைக் கண்காணிப்பில், தீத்து பவுலுக்குப் பெரிதும் உதவினார். கொரிந்தியருக்குப் பவுல் எழுதிய முதலாம், இரண்டாம் திருமுகங்களுக்கிடையில், (ஒருவேளை 2 கொரி 2:4; 7:8-இல் குறிக்கப்படும் கடிதத் துடன்) கொரிந்துக்குப் பவுலின் தூதுவராகச் சென்று, அங்கு நிலவிய சிக்கலான நிலை யைத் தீர்த்துவைக்க உதவினார். பவுல் தீத்துவைத் துரோவாவில் எதிர்பார்த்தார் (2 கொரி 2:13). ஆனால் எல்லாம் சரியாயிற்று என்ற நற்செய்தியோடு தீத்து மாசிதோனியா வில் பவுலைச் சந்தித்து அவருக்குப் பெரும் மகிழ்ச்சிதந்தார் (7:6). இந்த அனுப வத்தின் அடிப்படையில், எருசலேம் திருச் சபைக்காகப் புறவினத்திருச்சபைகளில் எடுக்கப்பட்ட காணிக்கையை மேற்பார்க்க பவுல் தீத்துவைக் கொரிந்துக்கு அனுப்பினார். இப்பணியைத் தீத்துதான் முன்பு கொரிந்தில் தொடங்கிவைத்தார் (8:6.16 தொ). ஆனால் 2 கொரி 10-13 என்ற பகுதி பிற்பாடு எழுதப்பட்ட மடலின் ஒருபகுதி என்று கருதப்பட்டால், பவுலுக்கும் கொரிந்துத் திருச் சபைக்குமிடையே உள்ள உறவு மீளவும் மோசமாகியதாகத் தெரிகிறது. பவுல், ''நான் உங்களுக்காகச் செய்யும் தொண்டில் என் உடனுழைப்பாளி'' என்று தீத்துவை அழைக்கிறார் (8:23).

மேலும் தீத்து கொரிந் தியரிடமிருந்து எவ்வித ஆதாயத்தையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதற்காக பவுல் அவரைப் புகழ்கிறார் (12:18).

தீத் 1:5-இன்படி, கிரேத்தாத் தீவில் தவறுகளைச் சீர்படுத்தி மூப்பர்களை ஏற் படுத்தவும் அங்குள்ள திருச்சபையை அமைக் கவும் பவுல் தீத்துவை அங்கு விட்டுச் சென்றார். தீத்துவுக்கு எழுதப்பட்ட திரு முகம் முழுவதிலும், பவுல் தன் உடனூழிய ரான தீத்துவின்பால் கொண்ட உயர்மதிப்பு மிளிர்கிறது. பவுல், ''நம் இருவருக்கும் பொதுவான விசுவாச வாழ்வில் என் உண்மை மகனான உமக்கு'' என்று தீத்துவை அழைத்து, திருமுகத்தைத் தொடங்குகிறார் (1:4). 2 திமொ 4:10-இல் வரும் சொந்தக் குறிப்பில், தீத்து தல்மாத்தியா என்ற மற்றொரு பணித்தளத்திற்குச் சென் றிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

4. தீத்து பிலேவியு வெஸ்பாசியானு, பேரரசன் வெஸ்பாசியானுவுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர். இவர் கி.பி. 39-இல் பிறந்தார். இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் போரிடக் கற்றுக் கொண்டார். அதன் பிறகு தன் தந்தையோடு 66-இல் யூதர்களின் கிளர்ச்சியை அடக்குவதில் பங்கு கொண்டார். கி.பி. 67-இல் தன் தந்தை உரோமையில் பேரரசரானபின் தீத்து 70-இல் யூதப்போரை வெற்றியுடன் முடித்தார்; 79-இல் ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சிக்காலம், குறுகியதாக இருந்தாலும், இவர்க்கு பின் வந்த சகோதரர் தொமிசிய னோடு ஒப்பிடும்போது முக்கியமானவரா கக் கருதப்படுகிறார்; மக்களுக்குப் பல நன்மைகள் செய்தார். இவர் 81-இல் இறக் கும்போது ஆட்சி மன்றத்தால் தெய்வமாகக் கருதப்பட்டார்.

5. சில போலிநூல்களால் நல்ல கள்வனுக்குக் (லூக் 23:39-43) கொடுக்கப்பட்ட பெயர்.